**தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மலையக மக்களுக்கான காணியுரிமையை உறுதி செய்யுமா?**

*சட்டத்தரணி சுகுமாரன் விஜயகுமார்*

*ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க சனாதிபதி வேட்பாளராக இருந்த போது மலையக மக்களின் காணி உரிமை தொடர்பாக தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் குறிப்பிட்ட கருத்து பின்வருமாறு அமைந்திருந்தது.*

*''மலையகத்தில் ஒன்றரை இலட்சம் குடும்பங்கள் ஒரு துண்டு நிலமும் இல்லாமல் இருக்கின்றார்கள். ஒரு குடும்பத்துக்கு 6 பேர்ச்சஸ் வழக்கினால் 9 இலட்சம் பேர்ச்சஸ் காணிகள் தேவை. மத்திய மலைநாட்டில் அவ்வளவு பாரிய அளவான காணிகளை வழங்கினால் ஏற்படப் போகும் பாதிப்பை நாம் பார்க்க வேண்டும். மத்திய மலைநாட்டில் அக்காணிகளை எங்கு பெற்றுக் கொள்வது, வீடுகளுக்கு அவ்வாறான அளவு காணிகளை பெற்றுக் கெடுக்கும் போது ஏற்படக்கூடிய சுழல் பிரச்சினைகள் என்ன என்பதை பார்க்க வேண்டும். அதிகளவான மாடி வீடுகளுக்கு நாம் செல்ல முடியாது.''*

*அவரின் கருத்து அவ்வாறு இருக்க, மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் 2018ஆம் ஆண்டு செயலாற்று அறிக்கையின் படி பின்வரும் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.*

- *மலையக மக்களுக்கு தேவையான வீடுகளின் எண்ணிக்கை 186,298 ஆகும். எனவே, 2024 ஆண்டாகின்ற போது குடும்பங்களின் அதிகரிப்போடு மேலும் அதிகரித்திருக்கும்.*

- *பெருந்தோட்டங்களில் உள்ள மொத்தக் காணிகளின் அளவு 280,034 ஹெக்டயர்கள். (1972 ஆண்டிற்கு பின்னர் பல ஹெக்டயர் பெருந்தோட்டக் காணிகள் சிங்கள மக்களுக்கு குடியிருப்பு மற்றும் வேறு தேவைகளுக்காக காணி சீர்திருத்த சட்டங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது.)*

- *117,275 ஹெக்டயர் பெருந்தோட்டக் காணிகள் பயிரிடப்படாமல் உள்ள நிலையில் அவை பயன்படுத்தப்படாத காணிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.*

*காணி சீர்திருத்தச் சட்டத்தின் பிரிவு 3ற்கு அமைய பெருந்தோட்டங்களில் வாழும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 20 பேர்ச்சஸ் காணி ஒதுக்கப்படுவதனை உறுதி செய்வதற்கான அடிப்படை இருக்கிறது. அத்தோடு கிராமங்களில் வீடமைப்புத் திட்டங்களுக்காக ஒரு குடும்பத்துக்கு 15 தொடக்கம் 40 பேர்ச்சஸ் காணிகள் வழங்கப்படுவதும் இங்கு வலியுறுத்தப்பட வேண்டும்.*

*எனவே, ஒரு குடும்பத்துக்கு 20 பேர்ச்சஸ் அடிப்படையில் 190,000 குடும்பங்களுக்கு வழங்கப்படும் போது (190,000*20) மொத்தமாக 3,800,000 பேர்ச்சஸ் காணிகள் தேவைப்படும். இது ஒரு பெரிய எண்ணிக்கையாக தென்பட்டாலும் ஹெக்டயரில் (ஒரு ஹெக்டயர் 395.2 பேர்ச்சஸ்கள் ஆகும்.) கணக்கிடும் போது இது வெறும் 9616 மாத்திரமே.*

- *மொத்த பெருந்தோட்டக் காணிகள் இந்த 9616 ஹெக்டயர் என்பது பெருந்தோட்டக் காணிகளில் வெறும் 3.45% காணிகளாகும்.*

- *இது பயன்படுத்தப்படாத 117,275 ஹெக்டயர் காணிகளில் வெறும் 8.20% மாத்திரம் என்பது குறிப்பிடத்தக்கது.*

- *வீடுகள் தவிர்ந்த ஏனைய பொதுத் தேவைகளுக்காக ஒரு தொகை காணி அவசியம்.*

- *ஏற்கனவே மலையக மக்கள் வசிக்கும் லயன் சார்ந்த குடியிருப்பு பிரதேசங்களில் பல ஆயிரம் ஏக்கர்கள் காணப்படுகின்றன. இது தொடர்பான உத்தியோபூர்வ தரவுகள் எங்கும் இல்லை.*

- *குறித்த 3.45% காணிகளுக்கு அப்பால் பாதை உட்பட உட்பட்டுமான தேவைகள் மற்றும் ஏனைய சமூக செயற்பாடுகளுக்கான காணிகளுக்குமாக சேர்த்து மொத்தமான 5% இற்கும் குறைவான பெருந்தோட்டக் காணிகளே தேவைப்படும்.*

- *தமது உழைப்பினூடாக காடுகளை வெட்டி கலனியாக்கி ஆயிரம் ஹெக்டயர் காணிகளை (தற்போது 280,034 ஹெக்டயர்களே மீதமுள்ளன) இலங்கையின் பொருளாதரத்திற்கு சேர்த்த அத்தோடு அந்நிய செலவாணியை ஈட்டுத் தந்த, தந்துவரும் மலையக மக்களுக்கு வசிப்பதற்காக அதில் 5% மாத்திரம் வழங்குவதில் என்ன பிரச்சினை உள்ளது?*

- *இன்றைய உலகில் மலைப்பாங்கான பிரதேசங்களின் சூழலை பாதுகாப்பதற்கான தொழில்நுட்பங்கள் வளர்ந்துள்ள நிலையில் மலைப்பான பிரதேசம் என்ற காரணத்தை காட்டி மலையக மக்களின் காணி உரிமை*

மறுப்பதை அல்லது குறுக்கப்படுவதை ஏற்க முடியாது. அத்தோடு மலையக மக்கள் வாழ்வதற்கான பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்படும் பிரதேசங்கள் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படாத பிரதேசங்களாக இருக்கும் போது சூழல் பாதுகாப்பு பற்றி பிரச்சினைகள் எழுவதற்கான வாய்ப்புகளும் மிக குறைவு.

• ஒரு தொழிலாளர் வர்க்க (இடதுசாரி) கொள்கையுடை தலைவராக அறியப்படும் சனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்கள் இயற்கை பாதுகாப்பு பற்றி குறிப்பிட்டுள்ள அதே கருத்தை மலையக மக்களுக்கு மாத்திரம் காணி உரிமையை மறுப்பதற்காக சில அரசியல் தலைவர்கள், உயர் மட்ட அரச அதிகாரிகள் மற்றும் பெருந்தோட்டங்களில் உள்ள மரங்களை வெட்டி இலாபம் ஈட்டும் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகாரர்கள் ஆகியோர் கொண்டுள்ளனர். இந் நிலையில் மலையக மக்களிடத்தில் அவர்களின் காணி உரிமையை உறுதி செய்வதற்கு தற்போதைய அரசாங்கத்தின் அணுகுமுறை பற்றி பாரிய கேள்விகள் மலையக சமூகத்தில் எழுந்துள்ளது.

• எனவே, சனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்கள் குறிப்பிட்டுள்ள மேற்குறிப்பட்ட கருத்துக்களை மீள் பரிசீலனை செய்ய தயார் இல்லை எனில் அது புதிய அரசாங்கம் மலையக மக்கள் உரிமைகள் தொடர்பாக மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கின்றது என்பதையே காட்டும். எவ்வாறாயினும், சனாதிபதியின் நிலைப்பாடுகளை மீள்பரிசீலனை செய்வதற்கான காலத்தை நாம் அவருக்கு அரசாங்கத்திற்கும் வழங்க வேண்டும். காலம் பதில் சொல்லும் சனாதிபதியின் தொழிலாளர் வர்க்க சார்பு எவ்வளவு நேர்மையானது என்பதை.